மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரில் வீட்டு வளவுகளுக்குள் உள்ள காய்கறித் தோட்டங்களில் காய்கறி உற்பத்தியை உயர்த்தும் நோக்குடன் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் மாதிரிக் காய்கறித் தோட்டங்கள் அமைத்துக் காட்டுவதன் மூலம், காய்கறித் தோட்டம் அமைத்திருப்போர்களுக்கு தோட்டக்கலை பற்றியும் சொல்லித் தரப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், காய்கறி விதைகள் ஈடுசெய் விலையில் வழங்கப்படுகின்றன. 31—3—1972 வரை பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் 15 சதவீத ஈடுசெய்விலையில் கொடுக்கப்பட்டு வந்தன. தொழில் நுட்ப ஆலோசனைகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. ஒட்டுமாஞ்செடிகள், எலுமிச்சைச் செடிகள் போன்ற பழச் செடி நாற்றுகள் 25 சதவீத ஈடுசெய் விலையில் வழங்கப்படுகின்றன. அரசால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அடக்க விலையில் 50 சதவீதத்தில் தோட்டக் கருவிகள் வழங்கப்படுகின்றன. அனுமதிக்கப்படும் இந்த ஈடுசெய் விலைச் சலுகை, நிறுவனம் ஒன்றுக்கு ரூ. 50 என வரையறுக்கப்பட்டுள்ளது.

தென் மாநிலங்களுக்கிடையே உணவுப் பொருள்கள் பகிர்வு

***19 வின.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தென் மாநிலங்களுக்கிடையே உணவுப் பண்டங்கள் போக்குவரத்து பற்றியும், மிகுதியான உணவு தானியங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வது பற்றியும் ஏற்பாடுகள் ஏதேனும் செய்யப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 1964-ம் ஆண்டு தென் மாநிலங்கள் (அரிசி ஏற்றுமதியை முறைப்படுத்துதல்) ஆணையின்படி தமிழ்நாடு ஒரு தனிமண்டலமாக உள்ளது. மாநிலத்துக்கு வெளியே அரிசி எடுத்துச் செல்வதற்கு அனுமதி வேண்டும். இந்திய அரசு குறிப்பிட்டுள்ள பங்கீட்டு அளவின்படி மாநிலங்களுக்கிடையில் அரிசிப் போக்குவரத்து முறைப்படுத்தப்படுகிறது. மாநிலங்களிடம் உபரியாகவுள்ள உணவு தானியங்களை இந்திய அரசின் மத்திய உணவுத் தொகுப்பு

1972 டிசம்பர் 2]

ஏற்பாட்டுக்குக் கிடைக்கச் செய்வதே இம்மண்டல முறையின் அடிப்படைக் கருத்தாகும். மற்ற மாநில அரசுகளுடன் நேரடியாக எவ்வித வர்த்தகமும் கிடையாது. தமிழ்நாடு 1964-ம் ஆண்டு மோட்டா ரக தானியங்கள் (ஏற்றுமதிக்கட்டுப்பாடு) ஆணையினால் மாநிலத்துக்கு வெளியே அனுமதி இருந்தால் தவிர, மற்றப்படி சிறுதானியங்கள் ஏற்றுமதி செய்யப்படுவது தடை செய்யப் பட்டது. கோதுமை, கோதுமை உற்பத்திப் பொருள்களைத் தமிழ் நாட்டுக்கு வெளியே எடுத்துச் செல்ல எவ்விதத் தடையுமில்லை.

Chit funds

* 20 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the **Minister** for Electricity be pleased to state—

(a) the total number of Chit funds functioning in Madras City; and

(b) the steps taken to keep watch over their solvency?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) 30—6—1972-ஆம் நாள் நிலவரப்படி சென்னை மாநகரில் 2,002 சிட்டுகள் செயல்பட்டு வந்தன.

(இ) சிட்டு நடத்துபவர் ஒவ்வொருவரையும் சிட்டுத் தொகையில் பாதிக்குக் குறையாத ரொக்கத் தொகையை ஏற்பளிக்கப்பட்ட வங்கி ஒன்றில் ரொக்கமாக வைப்பீடு செய்ய வேண்டுமெனவும் அல்லது சிட்டுத் தொகையில் பாதிக்குக் குறையாமல் முகமதிப்போ, நிலவா மதிப்போ இவற்றில் எது குறைவானதோ அந்த மதிப்பு உள்ள அரசு ஈட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டுமெனவும், அவ்வாறு வைப்பீடு செய்யப் பட்ட தொகையை அல்லது அரசு ஈட்டுப் பத்திரங்களைப் பதிவாளருக்கு மாற்றி அதை அவர் பிணையத் தொகையாகத் தமது பொறுப்பில் வைத்திருக்க வேண்டும் என வற்புறுத்தல் மூலமாகவும், இயங்காச் சொத்துக்களைப் பொறுத்தவரையில் அளிக்கப்படும் பிணையத் தொகையை முழு சிட்டுத் தொகைக்குச் சமமாக இருக்க வேண்டுமென வரையறுத்துள்ளதன் மூலமாகவும் சிட்டுத் தொகைக்கான உத்திரவாதம் அரசால் உறுதி செய்யப் படுகிறது. மேலும் தமிழ்நாடு சிட்டு நிதிச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கும், இம்மாநிலத்தில் நடைபெற்று